செ. கு. எண்: 056 நாள்: 10.06.2019

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 10.6.2019

பிரபல நகைச்சுவை நாடக நடிகரும், திரைக்கதை வசனகர்த்தாவும், திரைப்பட நடிகருமான திரு.கிரேசி மோகன் அவர்கள் இன்று (10.6.2019) உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

திரு.கிரேசி மோகன் அவர்கள், கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே நாடகங்களை எழுதத் தொடங்கினார். இவர், “மாது மிரண்டால்,'' ''சாட்டிலைட் சாமியார்,'' ''சாக்லேட் கிருஷ்ணா,'' ''மதில் மேல் மாது'' போன்ற பல நகைச்சுவை நாடகங்களை அரங்கேற்றியுள்ளார். அதுமட்டுமின்றி, பல வெற்றிப் படங்களுக்கு வசனமும் எழுதியுள்ளார்.

திரு.கிரேசி மோகன் அவர்களின் கலையுலக சேவையை பாராட்டி தமிழ்நாடு அரசு அவருக்கு “கலைமாமணி விருது'' வழங்கி கௌரவித்துள்ளது.

அனைவரிடமும் அன்பாக பழகக்கூடியவரும், நாடகத்துறை மற்றும் திரைத்துறையில் தனக்கென தனி முத்திரை பதித்தவருமான திரு.கிரேசி மோகன் அவர்களின் மறைவு தமிழ் நாடகத்துறைக்கும், திரைத்துறைக்கும் ஒரு பேரிழப்பாகும்.

திரு.கிரேசி மோகன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரையுலக மற்றும் நாடகத் துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9